# ***புகழ்ச்சிக்கூட்ட நற்செய்தி***

2014 புரட்டாதி மாதம் 08ம் திகதி முதல் 2014 புரட்டாதி மாதம் 14ம் திகதி வரை

## ***“உமது அரசு வருக”***

01. புபுது பாடல் இல 381 “வாரும் படைப்பாளராம் தூயஆவியே..........................”

02. உலகத்தை படைக்கும்பொழுது இறைவன் அனைத்தையும் படைத்துவிட்டு, தாம் படைத்த அனைத்தும் சிறப்பாக இருப்பதைக் கண்டு இறைவன் தனது சாயலுக்கு ஒப்பாக மனிதனை படைத்து அவை அனைத்தையும் ஆட்சி செலுத்துவதற்கு மனிதனுக்கு கையளித்தார். அவ்வாறு இறைவன் மனிதனுக்கு கையளித்த தேசத்தினுள், இன்று நாம் வாழுகின்ற இலங்கை திருநாட்டினுள் இருக்கும் நிலையை காணுகின்ற படைப்பாளர் அதை முன்கொண்டு கவலைப்படுவதாக கடந்த சங்கம குடும்ப ஞாயிறன்று நாம் தியானித்தோம்.

- சங்கமதினத்தன்று நாம் பெற்ற அனுபவங்களை சங்கமாக்கிக்கொள்வோம். இறைவிருப்பத்திற்கு முரணாக மனிதன் தேசத்தினுள் எதை செய்தாலும், இறைவன் தனது படைப்பின் மீது காட்டும் அனுதாபத்தையும் அன்பையும் காணுங்கள்.
- அவ்வாறான கருணையைக் காட்டுகின்ற இறைவனுக்கு நன்றி புகழ் கூறுவோம்.

03. அன்று கிறிஸ்துநாதர் கலிலேயாவில் வாழ்ந்த காலத்தில், இறைவனுக்கு செபிக்கும் மக்கள் அங்கு இருக்கின்றார்கள் என்பதை சீடர்கள் அறிந்திருந்தார்கள். ஆனாலும் கிறிஸ்துநாதரின் செபத்தில் வல்லமையும் வித்தியாசமும் இருந்ததை காணுகின்ற அவர்கள் கிறிஸ்துநாதரிடம் செபிப்பதற்கு கற்றுத் தருமாறு கூறினார்கள். ***“ஆண்டவரே யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்ட கற்றுக் கொடுத்தது போல் எங்களுக்கும் கற்றுக்கொடும்”*** என்றார். (புனித லூக்கா 11:1) அக்கணத்தில் கிறிஸ்துநாதர் இவ்வுலகில் தமது வாழ்க்கையில் கற்றுக்கொடுத்த ஒரே செபத்தை சீடர்களுக்கு கற்றுக்கொடுக்கின்றார். அதன் வழியாக கிறிஸ்துநாதருடைய உள்ளரங்கம் நன்றாக வெளிப்படுகின்றது. அவரது வருகை திருச்சபையை ஏற்படுத்துவது அல்ல, இறை தந்தையின் அன்பினால் நிரம்பிய அரசை உலகத்தினுள் ஏற்படுத்துவதாகும்.

- இறைவனது அரசின் முக்கியமான இலட்சணம் அன்பாகும். ***அன்பு கடவுளிடமிருந்து வருகிறது அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளை அறிந்துள்ளார்கள்***. (1யோவான் 4:8) படைப்பாளர் தனது படைப்பை ஆழமாக அன்பு செய்தார். அதை அன்பு என்னும் தனது சாயலுக்கு தமக்கு ஒப்பாக மனிதனை படைப்பதன் மூலம் நன்றாக தெளிவாகின்றது. அவ்வாறு படைத்த மனிதன் தனது படைப்பை முன்கொண்டு நிர்வாக வல்லமையும் ஆட்சியுரிமையையும் பெற்றுக்கொடுத்ததும் இவ்வன்பினாலாகும்.
- தமது விருப்பத்திற்கு மனிதன் கீழ்படியாமல் இறைவனிடமிருந்து விலகினாலும் மீண்டும் அவனை தமதாக்கிக்கொள்வதற்கு இறைவன் எடுக்கும் முயற்சியின் வழியாக இறை அரசின் முக்கிய இலட்சணமான அன்பு மிகவும் தெளிவாக விளங்குகின்றது. அவ்குறிக்கோளிற்காக பலவிதமான செய்தியாளர்கள், இறைவாக்காளர்களை அனுப்பி அது நிறைவேறாத கணத்தில் தனது ஒரே பேரான மகனையும் கூட தியாகம் செய்வதற்கு பின்வாங்கவில்லை. ***“தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு தம் அந்த மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்”*** (புனித யோவான் 3:16)

- ***“காலம் நிறைவேறிவிட்டது இறை ஆட்சி நெருங்கி வந்துவிட்டது மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்”*** (புனித மாற்கு 1:14-15) அது கிறிஸ்துநாதருடைய முதல் மங்கள பிரசங்கமாகும். அதன் பின்பு சீடர்களையும் தன்னை பின்பற்றும் அனைவரையும் இறைஅரசை வெளிப்படுத்துவதற்கே அழைத்தார். ***“என் பின்னே வாருங்கள் இறைஅரசை வெளிப்படுத்துங்கள்”*** என்பது இறைவனின் ஒரே வேண்டுகோள் ஆகும்.
- இறைவன் அவ்வாறான அழைப்பின் வழியாக எதிர்பார்த்தது நல்லதொரு, நீதிநேர்மையான, சோஷலிச ஜனனாயாகம் (மக்கள்ஆட்சி) நிரம்பிய அரசை ஏற்படுத்துவதற்கல்ல. அவ்விசேடமான அழைப்பு இறைவனிடமிருந்து பெறுகின்ற “அகப்பே அன்பு” ஒருவர் ஒருவருக்கு அன்பு செய்தவாறு இறைவனின் சாயலாகிய அன்பை மனித சமுதாயத்திற்கு வெளிப்படுத்துவதற்கேயாகும்.
- இன்று எமது நாட்டினுள் இருப்பது இறைவனுடைய விருப்பத்திற்கு ஏற்ப அன்பின் அரசா? படைப்பாளர் இதை முன்கொண்டு மகிழ்ச்சி அடைவாரா? (கலந்துரையாடுங்கள்)

04. வாரம் முழுவதும்

- கட்சி, நிறங்களைத் தவிர்த்து இன்று எமது நாட்டினுள் நிலவும் உண்மையான நிலையை காண்பதற்கு முயற்சி செய்வோம். புத்தகங்கள் பத்திரிகை வழியாக அதை பற்றி அறிந்துகொள்வோம்.
- ஆகக்குறைந்தது இரண்டு அல்லது மூன்று நாட்களாவது எமது நாட்டை முன்கொண்டு திவ்வியநற்கருணை நாதர் முன்னிலையில் தோன்றி நின்று செபிப்போம். (செவ்வாய், வெள்ளி நாட்களில்)
- தினமும் குடும்பசெபம், செபமாலை ஒப்புக்கொடுப்போம்.

05. இறுதிப்புகழ்ச்சி
பாடல் இல 185 “உம்மோடு என்றும்..........................................”

## ***புகழ்ச்சிக்கூட்ட நற்செய்தி***

2014 புரட்டாதி மாதம் 15ம் திகதி முதல் 2014 புரட்டாதி மாதம் 21ம் திகதி வரை

## ***“உமது விருப்பம் நிறைவேறட்டும்”***

01. ஆரம்பப்பாடல் இல 07 “தூயஆவியே எம் மனதை தேற்றும்.............................”

02. இறை அரசு என்பது இறைவனுடன் அன்போடு இருப்பது என்று நாம் கடந்த வாமை தியானித்தோம். இவ்இறைஅரசு முதலில் எம்முள், எமது குடும்பத்தினுள் அனுபவிக்கும் விதத்தை, அவ்வேண்டுகோளை நிறைவேற்றுகையில் நீங்கள் அனுபவித்த முடியாமை, அதேபோல் இறைவனுடைய அன்பிற்கு முரணானவை இன்று எமது நாட்டினுள் நிகழ்கின்ற அநேகமான நிகழ்ச்சிகளை, கடந்த வாரத்தினுள் நீங்கள் அறிந்துகொண்டவை சங்கமமாக்கிக்கொள்ளுங்கள்.

- எம்மாலும், எம் அனைவராலும் நாடு என்ற வகையில் இவ்விறை அன்பிற்கு எதிராக நிழ்வதை முன்கொண்டு மனம்வருந்துங்கள். ஆழமான பச்சாத்தாபத்திற்கு உள்ளாகுங்கள்.
- சிலுவையடிவாரத்திற்கு தேவதாயாருடன் செல்லுங்கள், கிறிஸ்துநாதரின் குருதியினால் தாயாரின் மூலமாக அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளுங்கள். புகழுங்கள்.

03. வாரத்திற்கான நற்செய்தி

- பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாவது நபரை இறைவனே இவ்வுலகத்திற்கு அனுப்பினார். தனது படைப்பாகிய மனிதனை முன்கொண்டு இறைவனது விருப்பத்தை நிறைவேற்றுவதற்கே அவ்வாறு செய்தார். இறைவிருப்பத்திற்கு மகனானவர் கீழ்படிந்தார். ***"கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வழிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாக கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதனுக்கு ஒப்பானார்"*** (பிலிப்பியர் 2:6-7)
  - கிறிஸ்துநாதர் எதிர்பாராத நேரத்தில் சமாரியப் பெண்ணை சந்திக்கின்றார். ***"அவ்வூரில் யாக்கோபின் கிணரும் இருந்தது பயணத்தால் களைப்புற்றிருந்த இயேசு கிணற்றோரமாய் அமர்ந்தார். அப்போது ஏறக்குறைய நண்பகல் வேலை, சமாரியப்பெண் ஒருவர் தண்ணீர் மொல்ல வந்தார்.*** (புனித யோவான் 4:6-7) இங்கு இறைவிருப்பத்திற்காக செயல்படுவதற்கு தகுதியான இடமோ தகுதியான நேரமோ இல்லை என தெளிவாகின்றது. சீடர்களும் அங்கு இல்லை. அங்கு இருப்பது கிறிஸ்துநாதரும் சமாரியப்பெண்ணும் மாத்திரமே. இறை விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அது ஒன்றுமே கிறிஸ்துநாதருக்கு தடையாக இருக்கவில்லை. அவரது ஒரே நோக்கம் பிதாவானவரின் விருப்பத்தை நிறைவேற்றுவது மாத்திரமே. சுற்றிலும் உலகத்திலிருந்து வரும் பிரதிசெயல்கள், இடம், நேரம் கிறிஸ்துநாதருக்கு என்றுமே பிரச்சனையாக இருக்கவில்லை. ***"என்னை அனுப்பியவரின் திருவுள்ளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையை செய்து முடிப்பதுமே என் உணவு"*** (புனித யோவான் 4:34)
  - தந்தையின் விருப்பத்தை கைவிட்டுவிட்டு மனிதனை சந்தோஷப்படுத்துவது கிறிஸ்துநாதருடைய நோக்கமாக இருக்கவில்லை. தான் யாரென்று மக்கள் கூறுகின்றார்கள் என்று வினவியபொழுது புனித இராயப்பர் கூறிய கருத்தை முன்கொண்டு கிறிஸ்துநாதர் மகிழ்ச்சி அடைந்தது மாத்திரமல்ல, தனது அரசின் பொறுப்பதிகாரியாக அதாவது விண்ணக அரசின் திறவுகோளை கையளிப்பதற்கு தயங்கவில்லை. (புனித மத்தேயு 16:13-19). அவ்வாறு தனது மனதை வென்ற ஒருவராய் இருந்தாலும் பிதாவுடைய விருப்பத்திற்கு எதிராக செயல்படுவதை காணுகையில் கிறிஸ்துநாதர் எத்தகையதான தொடர்புகள் உடைந்தாலும் தயங்காமல் அதற்கு எதிராக தாக்கியதும் இறைவிருப்பத்தை நிறைவேற்றுவதற்கான உள்ளாந்திர தாகத்தினால் ஆகும். "ஆனால் இயேசு பேதுருவை திரும்பிப்பார்த்து என் கண்முன் நில்லாதே சாத்தானே நீ எனக்கு தடையாய் இருக்கின்றாய் ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி என்னாது மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்" என்றார். (புனித மத்தேயு 16:23)
  - மிருகங்களுக்கும் மனிதனுக்கும் மரணத்தை முன்கொண்டு பெரியதொரு பயம் இருக்கின்றது. ஆகையால் அதற்கு அதிகமாக வெறுப்பை மனிதன் காண்பிக்கின்றான். ஆனாலும் இன்னுமொருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக மிகவும் பயங்கரமான மரணத்தை ஏற்றுக்கொள்வது நினைத்து கூட பார்க்க முடியாத ஒன்றாகும். உண்மையான மனிதனாக கிறிஸ்துநாருக்கு மரணம் மிகவும் பயங்கரமான ஒன்றாகியது உண்மையே. ஆகையால் தான் என் தந்தையே முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும் ஆனாலும் என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்.
  - எமது வாழ்விலும் உண்மையாக நிகழ்வது இறைதந்தையின் விருப்பமா? பிள்ளைகளுடைய திருமண வைபவத்தில், உயர் கல்விக்காக உள்ளாக்குதலில், பெண் பிள்ளை பூப்படைகையில், மரண சடங்குகளில் நாம் செய்வது இறைவனுடைய விருப்பத்தையா? முடியுமான அளவு எமது ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சி செய்வது

இல்லையா? ‘‘மனிதர் கடவுளை கொள்ளையடிக்க முடியுமா? நீங்கள் என்னை கொள்ளையடிக்கிறீர்கள் எவ்வாறு நாங்கள் உம்மை கொள்ளையடிக்கிறோம் என்று வினவுகிறீர்கள்’’ (மலாக்கி 3:8)

- எம்முள் இறைவிருப்பம் நிறைவேறுவதும் நாட்டினுள் இறைவிருப்பம் நிறைவேறுவதையும் தேடிப் பாருங்கள் கலந்துரையாடுங்கள்.

04. வாரம் முழுவதும்

- இறைவிருப்பத்திற்கு மாறாக எமது நாட்டினுள் நிகழ்பவை, விசேடமாக எமது குடும்பத்தினுள் நிகழ்பவை முன்கொண்டு, அந்நிலையில் நாம் குருடர்களாக, செவிடர்களாக, பேச்சிழந்தவர்களாக செயல்படும் விதத்தை இனங்காணுங்கள்.
- அதற்காக மன்னிப்பை வேண்டுவோம். உண்மையாக மனம் வருந்துவோம், பாவசங்கீர்த்தனத்தை பெற்றுக்கொள்ளுவோம்.
- எமது பாவத்திற்காக, தேசத்தின் பாவத்திற்காக உணர்ந்த நிலையில் ஒருநாளுக்கு ஒரு தடைவ ஒருத்தலை மேற்கொள்வோம்.

05. இறுதிப்புகழ்ச்சி

புபுது கீதாஞ்சலி பாடல் இல 170

***சங்கம சீடத்துவசங்க, புகழ்ச்சி கிராமங்களினுள் எதிர்வரும் காலத்தில் செயல்படுத்துவதற்கான அறிவுரை பத்திரிகை***

01. எமது தேசத்திற்காக நாம் இன்று செய்யும் இந்நடுநிலை வகித்தல், எமது தேசத்தைப் பற்றி இறைவனுடைய கனவு நிறைவேறுவதற்கான ஆரம்பம் மாத்திரமே. அக்கனவு உண்மையாகுவதற்கு அது நிறைவேறும் வரை இறைவன் முன்னிலையில் நடுநிலை வகிக்கும் மக்கள் இருக்க வேண்டும். கீழ் குறிப்பிடப்பிட்டுள்ள ஆலோசனைகளுக்கு உங்களுடைய கவனத்தை செலுத்துங்கள்.

- ❖ ஒவ்வொரு செவ்வாய்கிழமை வெள்ளிக்கிழமைகளிலும் முற்பகல 09.00மணி தொடக்கம் 12.00 மணி வரை மூன்று மணித்தியாலங்கள், பிற்பகல் 03.00 மணி தொடக்கம் 06.00 மணி வரை மூன்று மணித்தியாலங்கள் ஸ்ரீபிரசங்சாராமயில் திவ்வியநற்கருணை நாதர் முன்னிலையில் நடுநிலை வகிக்கும் குழுவுடன் ஒன்று சேர்ந்து நாட்டிற்காக விசேடமாக ஜனாதிபதி தேர்தலுக்காகவும், புதிய அரசியல் யாப்பை முன்கொண்டும் நாம் செபிப்போம். அதற்காக உங்களை பரிசுத்த ஆவியானவர் ஸ்பரிசிப்பாரானால் தயவு செய்து பங்குகொள்ளுங்கள். நாங்கள் உங்களை அன்போடு வரவேற்கின்றோம்.
- ❖ எமது நடுநிலையங்களில் பொறுப்பாக இருப்பவர்களிடமும் இவ்வாறானதொரு ஆயத்தத்தை செய்யுமாறு கேட்டு கொள்கின்றோம்.
- ❖ இவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு பங்குகொள்ள முடியாதவர்கள் தனிமையாகவும் குழுவாகவும் திவ்வியநற்கருணைநாதர் முன்னிலையில் தாழ்மையுடன் செபிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

02. ***உபவாசமும் செபமும்***

இன்று தொடக்கம் தைமாத இறுதி வரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உபவாசத்துடன் இருக்குமாறு ஆலோசனை வழங்குகின்றோம். வாரத்தின் மற்றைய நாட்களிலும் உங்களுக்கு முடியுமான செயல்பாடுகளில் உள்ளாகுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (இதற்காக எவரையும் வற்புறுத்தவில்லை நோயாளர்கள், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் உங்களுக்கு முடியுமான விதத்தில் ஒற்றுமையாகும் படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்) நாங்கள் அனைவரும் சிறுவர்கள் மாணவ, மாணவிகள் இளைஞர், இளம்பெண்கள் அனைவரும் ஒருத்தல்களை செய்தவாறு அவையனைத்தையும் தேசத்தின் மீட்பிற்காக இறைவனுக்கு ஒப்புக்கொடுக்க முடியும்.

03. தினமும் குடும்ப செபம், குடும்ப செபமாலைக்கு நாம் உற்சாகப்படுத்துகின்றோம்.

04. இக்காலகட்டத்தினுள் முடியுமான அளவு ஒற்றுமையின் வாழ்க்கைக்கு உள்ளாகுங்கள். நிரந்தரமும் உயிர்த்த கிறிஸ்துவை சந்திப்பதை உங்களுடைய வாழ்க்கை முறையாக்கிக்

கொள்ளுங்கள். மன்னிப்பு கொடுங்கள், மன்னிப்பு பெற்றுகொள்ளுங்கள். நீங்கள் பெறும் அனுபவங்களை ஒருவர் ஒருவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எனது மணித்தியாலம், திருவிவிலியத்தை வாசிப்பது எமது வாழ்க்கை முறையாகும் அதை ஒருபோதும் மறக்க வேண்டாம்.

05. அருட்சாதன வாழ்வு – பாவசங்கீர்த்தனம் - திவ்வியநற்கருணைநாதரை பெற்றுக்கொள்வதை விசேடமான செயலாக கருதுங்கள்.

06. அமைதியான ஜனாதிபதி தேர்தலுக்காகவும் புதிய அரசியல் யாப்பும் எமக்கு கிடைப்பதாக சித்திரம் ஒன்றை அமைத்துக்கொள்ளுங்கள். சித்திரம் நிறைவேறுவதாக விசுவசித்து நிரந்தரமும் புகழுங்கள்.